ஹோட்டல் மற்றும் உணவக சேவைகளில்

இந்தியாவில் தமிழ்நாடு முன்னிலை!

சென்னை, டிச. 23 -

ஹோட்டல் மற்றும் உணவக சேவைகளின் மொத்த மதிப்பு சேர்த்தலில் (Gross Value addition) 2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த இந்தியாவில் தமிழ்நாடு மிகப் பெரும் பங்களிப்பாளராக உருவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

மொத்த மதிப்பு சேர்த்தலில் 54 சதவிகிதத்தை கடந்த பங்களிப்புடன், சேவைத் துறை இந்தியப் பொருளாதாரத்தின் மிகப் பெரியதும் மிகச் சுறுசுறுப்பானதும் ஆனகூறாக உள்ளது.

மொத்த மதிப்பு சேர்த்தலில் உயரிய நிலையில் மாநில வாரியாக உள்ள பங்கு வருமாறு:-

தமிழ்நாடு	- 13.9	- சதவிகிதம்
உத்தரபிரதேசம்	- 12.1	- சதவிகிதம்
மகாராஷ்டிரம்	- 11.7	- சதவிகிதம்
கர்நாடகா	- 11.2	- சதவிகிதம்
ஆந்திரபிரதேசம்	- 6.5	- சதவிகிதம்
கேரளா	- 6.5	- சதவிகிதம்
டெல்லி	- 5	- சதவிகிதம்
மேற்கு வங்கம்	- 4.8	- சதவிகிதம்
தெலுங்கானா	- 4.8	- சதவிகிதம்
ராஜஸ்தான்	- 4.4	- சதவிகிதம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (22.12.2025) சென்னை, கோட்டூர்புரம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், எழுத்தாளர் திருமாவேலன் எழுதிய "முறைசெய்து காப்பாற்றும் முதலமைச்சர்" என்ற நூலினை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள் - கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி சோமு, அருண் நேரு, முனைவர் க.பொன்முடி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் கோபண்ணா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ்.பாரதி, ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு, மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், இயக்குநர் அமிர்தம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், நூல் ஆசிரியர் ப.திருமாவேலன், கருஞ்சட்டை பதிப்பகத்தின் இயக்குநர் பெல் ராஜன், கவிதா பதிப்பகத்தின் சேது சொக்கலிங்கம், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் மற்றும் சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழர் திருநாள் பொங்கல் விழாவையொட்டி – தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளைப் பறைசாற்றும்

"சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சிகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச.23-

தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவையொட்டி தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் நடைபெறும் "சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.1.2026 அன்று மாலை 6 மணிக்கு தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். சென்னை மாநகரின் 20 இடங்களில் 15.01.2026 முதல் 18.1.2026 வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் ஆண்டுதோறும் தை மாதம் "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா" என்ற நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் இந்த நிகழ்ச்சி வரும் 14-ஆம் தேதி துவங்கி நடைபெறவுள்ளது. இதே போன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நமது மாநிலத்தின் பாரம்பரிய கலைத் திருவிழாவினை நடத்திடுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவின் போது 'சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா' என்ற மாபெரும் கலைவிழா கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இந்த ஆண்டின் கலை நிகழ்ச்சிகள் 14.1.2026 அன்று மாலை 6 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இந்த விழாவில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உள்ளன.

தொடக்க விழாவை அடுத்து, 'சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா' கலை நிகழ்ச்சிகள் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, மெரினா கடற்கரை, வள்ளுவர் கோட்டம், செம்மொழி பூங்கா, ராயபுரம் ராபின்சன் பூங்கா, எழும்பூர் அரசு அருங்காட்சியகம், ராஜரத்தினம் விளையாட்டரங்கம், தி.நகர் நடேசன் பூங்கா, ராஜா அண்ணாமலைபுரம்- அரசு இசைக் கல்லூரி வளாகம், கிண்டி கத்திபாரா சந்திப்பு, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர் பூங்கா, அசோக் நகர் மாநகராட்சி விளையாட்டு திடல், வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், ஜாபர்கான் பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டு மைதானம், ஆவடி படைத்துறை உடைத் தொழிற்சாலை, பல்லவாரம் கன்டோன்மெண்ட் பூங்கா, தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளி மைதானம் ஆகிய 20 இடங்களில் 15.1.2026 முதல் 18.1.2026 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள்ளன.

நாட்டுப்புறக் கலை வடிவங்கள்!

'சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழாவில்' தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், , ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக் கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாட்டுப்புற வடிவங்களை நிகழ்த்தி பார்வையாளர்களை பரவசப்படுத்துவார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் கொண்டாட வேண்டிய விழாவாகும் இது என்று குறிப்பிட்டு, நமது பண்பாட்டுப் பெருமிதங்களை, அருங்கலை சிறப்புகளை மீட்டெடுத்து, இளம் தலைமுறையினர் பார்த்து மகிழத்தக்க வகையிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாட எற்பாடுகள் செய்யவேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழர் பண்பாட்டின் ஆயிரமாயிரம் ஆண்டுகால தொடர்ச்சியை எடுத்துக்காட்டும் வண்ணம், 'கீழடி அருங்காட்சியகம்' அமைத்தும், தற்போது புதியதாக 'பொருநை அருங்காட்சியகம்' அமைத்தும் இந்த அரசு பெருமைமிக்க நம் பண்பாட்டினை, வரலாற்றினை அடுத்த தலைமுறைக்கு தொடர்ந்து கொண்டு செல்லும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

இது நமது இல்லத் திருவிழா!

அந்த வகையில் நமது சீர்மிகு மண் சார்ந்த இசையும், கலையும் காலத்தால் அழியாமல் பாதுகக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்ற வகையில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் அனைவரும் இது நமது இல்லத் திருவிழா என்று இணைந்து கொண்டாட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களின் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்களும் கலை நிகழ்ச்சிகள் வழங்க உள்ளனர்.

சென்னையில் விழா நடைபெறும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண்ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங்குகள் அமைத்து உணவுத் திருவிழாவும் நடத்தப்பட உள்ளது. பூம்புகார் நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட உள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளும் பார்வையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்று பாரம்பரியத்தையும் செழுமையான, பண்பாட்டையும் வெளிப்படுத்தும் நமது நாட்டுப்புறக் கலை வடிவங்களைப் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பிற நகரங்களில் வாழும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையிலும் சங்கமம் நம்ம ஊரு திருவிழாக்கள் தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்ட உள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்கான நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பயன்பெறவும், தமிழ் மண்ணின் வளமான கலை வடிவங்கள் உயிர்போடு திகழவும் உதவுகின்றன.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையில்

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா!

3000 குடும்பங்களுக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுப் பொருட்களை வழங்குகிறார்!

சென்னை, டிச.23-

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையில் இன்று சைதை தொகுதியில் கிறிஸ்துமஸ் விழா நடக்கிறது. 3000 குடும்பங்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுப் பொருட்களை வழங்குகிறார். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் ஆகியோர்0 பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் சிறு பான்மைநல உரிமைபிரிவு சார்பில் மாவட்ட அமைப்பாளரும், தலைமைக் கழக சொற்பொழிவாளருமான சைதை சாதிக் தலைமையிலும், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலக் குழு தலைவருமான இரா.துரைராஜ் ஆகியோர் முன்னிலையிலும்,

வட்டகழக செயலாளர்கள் தா.மோகன்குமார் எம்.சி., நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், த.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்ஷா, ஆ.வரதன், வே.முருகன், அட்கோகமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆகியோர் வரவேற்பில் இன்று (23.12.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில், சைதாப்பேட்டை வி.ஜி.பி சாலையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கலைகல்லூரி வளாகத்தில் கிறிஸ்துமஸ் விழா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று 3000 குடும்பங்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்தரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக் குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சைதை மா.அன்பரசன், களக்காடிஎல்லப்பன், மின்னல் கந்தப்பன்,

கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், தகவல் தொழில் நுட்ப அணி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ந.மணிகண்டன், தொ.மு.ச. மாவட்ட நிர்வாகிகள், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கர்,

பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், கழக முன்னோடிகள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

கழக இளைஞர் அணியின் மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், இன்று (23.12.2025-செவ்வாய்க்கிழமை)மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21.12.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

வருகின்ற 29ஆம் தேதி பல்லடத்தில் நடைபெறுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மண்டல மாநாட்டிற்கான பணியினை அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், மேற்கு மண்டல பொறுப்பாளர் கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈ.பிரகாஷ், ஈஸ்வரசாமி கணபதி ராஜ்குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், திருப்பூர் செல்வராஜ், அரவக்குறிச்சி இளங்கோ மற்றும் மாநில, மாவட்ட மகளிர் அணியினரும் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி, வாலாஜாபாத் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. இல்லாமல்லி ஸ்ரீதர் தலைமையில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியை வாதி மாசிலாமணி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தேவேந்திரன், பி.சேகர், என்.பாண்டியன், டி.சஞ்சய் காந்தி உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், துணைத் தலைவர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர். சென்றாண்டு இந்த பள்ளியில் பன்னிரண்டாம் பத்தாம் வகுப்பு முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ ருக்கு சொந்த நிதியில் பரிசு தொகை வழங்கினார்.